உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# உத்தமம் 3



Compiled by
P. Isaac Chandran

நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்: அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்.
நீதிமொழிகள் 20:7

செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்: துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப பாழாக்கும்.
நீதிமொழிகள் 11:3

சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சப் பொருளே உத்தமம் .
நீதிமொழிகள் 15:16

அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்.
நீதிமொழிகள் 16:8

பொன்னைச் சம்பாதிப்பதிலும் ஞானத்தை சம்பாதிப்பது எவ்வளவு உத்தமம்! வெள்ளியைச் சம்பாதிப்பதிலும் புத்தியைச் சம்பாதிப்பது எவ்வளவு மேன்மை!
நீதிமொழிகள் 16:16

உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்: மாறுபாடான இருவழியில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான்.
நீதிமொழிகள் 28:18

உத்தமர்களை மோசப்படுத்தி, பொல்லாத வழியிலே நடத்துகிறவன் தான் வெட்டின குழியில் தானே விழுவான்: உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள்.
நீதிமொழிகள் 28:10

மாறுபாடான உதடுகளுள்ள மூடனைப்பார்க்கிலும், உத்தமனாய் நடக்கிற தரித்திரனே வாசி.
நீதிமொழிகள் 19:1

பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்: பட்டணத்தை பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.
நீதிமொழிகள் 16:32

நீதி உத்தமமார்க்கத்தானைத் தற்காக்கும்: துன்மார்க்கமோ பாவியைக் கவிழ்த்துப்போடும்.
நீதிமொழிகள் 13:6

மாறுபாடுள்ள இருதயமுள்ளவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்: உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்.
நீதிமொழிகள் 11:20

உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்: துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால் விழுவான்.
நீதிமொழிகள் 11:5

கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண், அக்கிரமகாரருக்கோ கலக்கம்.
நீதிமொழிகள் 10:29

உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்.
நீதிமொழிகள் 10:9

ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற்போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்.
பிரசங்கி 9:16

ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது, பெருமையுள்ளவனைப்பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்.
பிரசங்கி 7:8

இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப்பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்.
பிரசங்கி 2:13

அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே,கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.
மத்தேயு 25:23

தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.
2 கொரிந்தியர் 10:18

சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.
1 தெசலோனிக்கேயர் 2:4

நீ வெட்கபடாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.
2 தீமோத்தேயு 2:15

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.
யாக்கோபு 1:12

ஆம்! உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்: இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாக நாம் உத்தமத்திலே நடப்போம்.

உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனாக நடந்து கொஞ்சத்திலே உண்மையாயிருந்தால் அநேகத்தின்மேல் நம்மை அதிகாரியாக வைப்பார். அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்து நித்திய காலமாய் அவரோடே வாழலாம்

**********************